# 8ஆவது

# சமூக அறிவியல்

# Winmeen Test Sheets

சமச்சீர் புத்தகத்தின் ஒவ்வொரு வரியில் இருந்தும் எடுக்கப்பட்ட கேள்விகள்

முற்றிலும் TNPSC பாடத்திட்டத்தை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட வினாக்கள்

பாடவாரியாக விரைவான திருப்புதலுக்கு உதவும் வகையில் உருவாக்கப்பட்டது

23 பாடங்கள் 1400+ கேள்விகள்

**Winmeen E Learning**

**Email: admin@winmeen.com**

**Mobile: 6385150514**

# அர்ப்பணிப்பு

அனைத்து போட்டித்தேர்வுகளுக்கும் உதவும் வகையில் உருவாக்கப்பட்ட இந்த புத்தகத்தை போட்டித்தேர்வுக்கு பயிலும் மாணவர்களுக்காக அர்ப்பணிக்கிறோம்.

கொடுக்கப்பட்ட வினாக்களைப் பயிற்சி செய்து, நீங்கள் இந்த புத்தகத்தின் மூலம் போட்டித்தேர்வில் மிகப் பெரிய வெற்றியடைய வாழ்த்துக்கள்.

| வ.எண் | பொருளடக்கம் | வினாக்கள் | பக்க எண் |
|---|---|---|---|
| | **வரலாறு** | | |
| 1 | ஐரோப்பியர்களின் வருகை | 79 | 1 |
| 2 | வர்த்தகத்திலிருந்து பேரரசு வரை | 117 | 7 |
| 3 | கிராம சமூகமும் வாழ்க்கை முறையும் | 52 | 17 |
| 4 | மக்களின் புரட்சி | 80 | 22 |
| 5 | இந்தியாவில் கல்வி வளர்ச்சி | 77 | 28 |
| 6 | இந்தியாவில் தொழிலகங்களின் வளர்ச்சி | 50 | 35 |
| 7 | ஆங்கிலேயர் ஆட்சியில் நகர்ப்புற மாற்றங்கள் | 54 | 40 |
| 8 | காலங்கள்தோறும் இந்திய பெண்களின் நிலை | 64 | 45 |
| | **குடிமையியல்** | | |
| 9 | மாநில அரசு எவ்வாறு செயல்படுகிறது? | 101 | 51 |
| 10 | குடிமக்களும் குடியுரிமையும் | 47 | 59 |
| 11 | சமயச்சார்பின்மையைப் புரிந்துகொள்ளுதல் | 22 | 63 |
| 12 | மனித உரிமைகளும், ஐக்கிய நாடுகள் சபையும் | 30 | 65 |
| 13 | சாலைப்பாதுகாப்பு விதிகள் மற்றும் நெறிமுறைகள் | 41 | 68 |
| 14 | பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை | 64 | 72 |
| 15 | நீதித்துறை | 67 | 78 |
| | **புவியியல்** | | |
| 16 | பாறை மற்றும் மண் | 67 | 84 |
| 17 | வானிலையும் காலநிலையும் | 94 | 90 |
| 18 | நீரியல் சுழற்சி | 70 | 97 |
| 19 | இடம்பெயர்தல் மற்றும் நகரமயமாதல் | 45 | 103 |
| 20 | இடர்கள் | 42 | 107 |
| 21 | தொழிலகங்கள் | 35 | 111 |
| | **பொருளியல்** | | |
| 22 | பணம், சேமிப்பு மற்றும் முதலீடுகள் | 54 | 114 |
| 23 | பொது மற்றும் தனியார் துறைகள் | 53 | 119 |
| | **Answer Key** | 1405 | 124–128 |

# Winmeen Self Study Course

- Online Coaching for Tnpsc Group 1, 2, 4, VAO & All TN Govt Exams.
- இன்டர்வியூ அல்லாத குரூப் 2எ & குரூப் 4, தேர்வுகளில் முதல் முயற்சியிலேயே வெற்றி பெற இந்த பயிற்சி மிகவும் பயனளிக்கும்.
- Samacheer Lesson Wise Daily Videos + Daily Online Test + Test Pdf With Explanation
- Life Time Subscription - Fees : 5000 Rs
- Lesson By Lesson Online Test + Complete Book Back Questions + Previously Asked One liners.
- Attend Test Online and Get Answer Key With Explanation
- Are you Ready to Spend Minimum 6 months to crack Tnpsc Exams? - Join Fast.
- Contact : +91 6385150514

# 8th Social Science Lesson 1 Questions in Tamil - வரலாறு

## 1. ஐரோப்பியர்களின் வருகை

1. ஆனந்தரங்கரின் பிரெஞ்சு இந்திய உறவு முறை பற்றிய அன்றாட நிகழ்வுகளின் குறிப்புகள் எந்தக் காலக்கட்டத்தை சேர்ந்தவை?

A) 1725 – 1746

B) 1728 – 1760

C) 1738 – 1780

D) 1736 – 1760

2. ஆனந்தரங்கர் பாண்டிச்சேரி பிரெஞ்சு வர்த்தகத்தில் ___________ ஆக பணிபுரிந்தார்.

A) கணக்கர்

B) மேற்பார்வையாளர்

C) மொழிபெயர்ப்பாளர்

D) காவலர்

3. கீழ்க்கண்டவற்றுள் எழுதப்பட்ட ஆதாரங்களாக கருதப்படுபவை எவை?

1. இலக்கியங்கள் 2. பயணக் குறிப்புகள்

3. நாட்குறிப்புகள் 4. சுயசரிதை

5. துண்டு பிரசுரங்கள் 6. அரசாங்க ஆவணங்கள்

7. கையெழுத்துப் பிரதிகள்

A) அனைத்தும்

B) 1, 2, 3, 7

C) 2, 4, 5

D) 1, 2, 3, 5

4. இந்திய தேசிய ஆவணக்காப்பகம் (NAI) எங்கு அமைந்துள்ளது?

A) கல்கத்தா

B) சென்னை

C) டெல்லி

D) மும்பை

5. கூற்று 1: வரலாற்று ஆவணங்கள் பாதுகாக்கப்படும் இடம் ஆவணக்காப்பகம் என்று அழைக்கப்படுகிறது.

கூற்று 2: இந்திய தேசிய ஆவணக்காப்பகம் ஆசியாவில் உள்ள ஆவணக் காப்பகங்களிலேயே மிகவும் பெரியதாகும்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

6. இந்திய தேசிய ஆவணக்காப்பகத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?

A) ஆனந்தரங்கர்

B) வில்லியம் மில்லர்

C) ஜார்ஜ் வில்லியம் பாரஸ்ட்

D) ஹென்றி

7. சென்னை பதிப்பாசனத்தில் உள்ள பெரும்பாலான ஆவணங்கள் எந்த மொழியில் உள்ளன?

A) பிரெஞ்சு

B) தமிழ்

C) சமஸ்கிருதம்

D) ஆங்கிலம்

8. கூற்று 1: சென்னை பதிப்பாசனம் தென்னிந்தியாவின் மிகப்பழமையான மற்றும் மிகப்பெரிய களஞ்சியங்களுள் ஒன்றாகும்.

கூற்று 2: தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் டச்சு, டேனிஷ், பாரசீக, மராத்திய நிர்வாக பதிவுகளின் தொகுப்புகள் பிரெஞ்சு, போர்ச்சுக்கீசிய, தமிழ், உருது போன்ற மொழிகளில் உள்ளன.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

9. தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் _________ ஆம் ஆண்டு டச்சு பதிவுகளின் தொகுப்புகள் உள்ளன.

A) 1624

B) 1637

C) 1640

D) 1642

10. 'சென்னை நாட்குறிப்பு பதிவுகள்' யாருடைய முயற்சியால் வெளியிடப்பட்டது?

A) டாட்வெல்

B) வில்லியம் மில்லர்

C) ஜார்ஜ் வில்லியம் பாரஸ்ட்

D) ஹென்றி

11. தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் உள்ள டேனிஷ் பதிவுகள் எந்த காலப்பகுதியை உள்ளடக்கியவை?

A) 1666–1745

B) 1647–1845

C) 1777–1845

D) 1776–1845

12. தவறான இணையைத் தேர்ந்தெடு.

A) லூயிஸ் கோட்டை – பாண்டிச்சேரி

B) புனித ஜார்ஜ் கோட்டை – சென்னை

C) புனித டேவிட் கோட்டை – கடலூர்

D) புனித பிரான்சிஸ் ஆலயம் – கோவா

13. இந்தியாவின் மிகப்பெரும் தேசிய அருங்காட்சியகம் நிறுவப்பட்ட ஆண்டு

A) 1942

B) 1947

C) 1948

D) 1949

14. நவீன இந்தியாவின் முதல் நாணயம் __________ ஆண்டில் ஆங்கிலேய ஆட்சியில் வெளியிடப்பட்டது.
A) 1762
B) 1792
C) 1862
D) 1892
15. _________ ஆண்டு ரிசர்வ் வங்கி முறையாக நிறுவப்பட்டு இந்திய அரசின் ரூபாய் நோட்டுக்களை வெளியிடும் அதிகாரத்தைப் பெற்றது.
A) 1928
B) 1932
C) 1934
D) 1935
16. மன்னர் ஆறாம் ஜார்ஜ் உருவம் தாங்கிய இந்தியாவின் முதல் 5 ரூபாய் நோட்டு எந்த ஆண்டு ரிசர்வ் வங்கியால் வெளியிடப்பட்டது?
A) 1935 நவம்பர்
B) 1936 ஏப்ரல்
C) 1937 அக்டோபர்
D) 1938 ஜனவரி
17. புனித டேவிட் கோட்டை ஆங்கிலேயரால் கட்டப்பட்ட ஆண்டு
A) 1592
B) 1672
C) 1984
D) 1690
18. துருக்கியர்களால் கான்ஸ்டாண்டிநோபிள் கைப்பற்றப்பட்ட ஆண்டு
A) கி.பி 1543
B) கி.பி 1548
C) கி.பி 1483
D) கி.பி 1453
19. கூற்று: போர்ச்சுக்கீசிய இளவரசர் ஹென்றி பொதுவாக "மாலுமி ஹென்றி" என அறியப்படுகிறார்.
காரணம்: ஹென்றி உலகின் அறியப்படாத பகுதிகளை ஆராயவும், சாகச வாழ்க்கையை மேற்கொள்ளவும் தனது நாட்டு மக்களை ஊக்குவித்தார்.
A) கூற்று சரி, காரணம் தவறு
B) கூற்று தவறு, காரணம் சரி
C) கூற்று காரணம் இரண்டும் சரி மற்றும் சரியான விளக்கம்
D) கூற்று காரணம் இரண்டும் சரி ஆனால் சரியான விளக்கமல்ல.
20. போர்த்துக்கீசிய மாலுமியான பார்த்தலோமியோ டயஸ் தென்னாப்பிரிக்காவின் தெற்குமுனையை அடைந்த ஆண்டு
A) 1427
B) 1437
C) 1467
D) 1487
21. வாஸ்கோடாகாமா, இந்திய மாலுமி ஒருவரின் உதவியோடு கள்ளிக்கோட்டையை அடைந்த ஆண்டு
A) கி.பி 1492
B) கி.பி 1494
C) கி.பி 1496
D) கி.பி 1498
22. வாஸ்கோடாகாமா கள்ளிக்கோட்டையை அடைந்தபோது அவரை வரவேற்ற மன்னர்
A) ஜஹாங்கீர்
B) சாமரின்
C) காப்ரல்
D) ஔரங்கசீப்
23. இரண்டாவது போர்த்துகீசிய மாலுமி பெட்ரோ அல்வாரிஸ் காப்ரல் என்பவர் கள்ளிக்கோட்டையை வந்தடைந்த ஆண்டு
A) 1499
B) 1500
C) 1501
D) 1502
24. வாஸ்கோடாகாமா, எத்தனை கப்பல்களுடன் இரண்டாவது முறையாக இந்தியா வந்தடைந்தார்?
A) 10
B) 11
C) 12
D) 13
25. வாஸ்கோடாகாமா கீழ்க்கண்ட எந்த பகுதிகளில் போர்ச்சுக்கீசிய வர்த்தக மையத்தை நிறுவினார்?
1. கண்ணனூர் 2. கள்ளிக்கோட்டை
3. கொச்சின் 4. குஜராத்
A) 1, 2, 3
B) 2, 3, 4
C) 1, 2, 4
D) 1, 3, 4
26. ___________ போர்ச்சுக்கீசிய கிழக்கிந்திய கம்பெனியின் முதல் தலைநகரமாயிற்று.
A) கண்ணனூர்
B) கோவா
C) குஜராத்
D) கொச்சின்
27. வாஸ்கோடாகாமா மூன்றாவது முறையாக இந்தியா வந்த ஆண்டு
A) 1521
B) 1522
C) 1523
D) 1524

28. இந்தியாவிலிருந்த போர்த்துக்கீசிய பகுதிகளுக்கு முதல் ஆளுநராக அனுப்பப்பட்டவர்
A) வாஸ்கோடாகாமா
B) பெட்ரோ அல்வாரிஸ்
C) பிரான்சிஸ்கோ டி அல்மெய்டா
D) நினோ டி குன்கா
29. இந்தியாவில் போர்ச்சுக்கீசிய கப்பற்படையை பலப்படுத்த 'நீலநிறக்கொள்கை' பின்பற்றியவர் யார்?
A) பெட்ரோ அல்வாரிஸ்
B) பிரான்சிஸ்கோ டி அல்மெய்டா
C) அல்போன்சோ டி அல்புகர்க்
D) நினோ டி குன்கர்
30. ___________பகுதி சுல்தான்கள் போர்ச்சுக்கீசியருக்கு எதிராக, எகிப்து மற்றும் துருக்கி சுல்தான்களுக்கு ஆதரவளித்தனர்.
A) பீஜப்பூர், டெல்லி
B) காபூல், டெல்லி
C) பீஜப்பூர், குஜராத்
D) காபூல், குஜராத்
31. அல்மெய்டா காலத்தில் ___________க்கு அருகில் நடைபெற்ற கடற்படை போரில் முஸ்லீம் கூட்டுப்படைகள் போர்ச்சுக்கீசியரை தோற்கடித்தன.
A) கோவா
B) மும்பை
C) சாவல்
D) டையூ
32. ____________ல் நடைபெற்ற கடற்போரில் அல்மெய்டா, முஸ்லீம் கூட்டுப் படைகளைத் தோற்கடித்தார்.
A) கோவா
B) மும்பை
C) சாவல்
D) டையூ
33. இந்தியாவில் போர்ச்சுக்கீசிய அதிகாரத்தை உண்மையில் நிறுவியவர் ___________ ஆவார்.
A) வாஸ்கோடாகாமா
B) அல்போன்சோ டி அல்புகர்க்
C) பிரான்சிஸ்கோ டி அல்மெய்டா
D) நினோ டி குன்கா
34. அல்போன்சோ டி அல்புகர்க் __________ ஆண்டு பீஜப்பூர் சுல்தானிடமிருந்து கோவாவைக் கைப்பற்றினார்.
A) 1509 நவம்பர்
B) 1510 நவம்பர்
C) 1509 பிப்ரவரி
D) 1510 பிப்ரவரி
35. ___________ ஆண்டு போர்ச்சுக்கீசியர் ஆசியாவில் கடற்படை மேலாண்மையைக் கோரினர்.
A) கி.பி 1507
B) கி.பி 1508
C) கி.பி 1509
D) கி.பி 1510
36. நினோ – டி – குன்கா __________ ஆண்டு குஜராத்தின் பகதூர்ஷாவிடமிருந்து பசீன் பகுதியைக் கைப்பற்றினார்.
A) 1532
B) 1533
C) 1534
D) 1535
37. நினோ டி குன்கா ___________ ஆண்டு போர்ச்சுக்கீசியரின் தலைநகரை கொச்சியிலிருந்து கோவாவிற்கு மாற்றினார்.
A) 1529
B) 1530
C) 1531
D) 1532
38. நினோ டி குன்கா ____________ ஆண்டு சால்செட்டை ஆக்கிரமித்தார்.
A) 1538
B) 1542
C) 1545
D) 1548
39. _____________ இந்தியாவில் புகையிலை சாகுபடியை அறிமுகப்படுத்தினர்.
A) டச்சுக்காரர்கள்
B) டேனியர்கள்
C) போர்ச்சுக்கீசியர்கள்
D) ஆங்கிலேயர்கள்
40. __________ ஆண்டு போர்ச்சுக்கீசியரால் கோவாவில் அச்சு இயந்திரம் அமைக்கப்பட்டது.
A) 1552
B) 1554
C) 1556
D) 1558
41. ___________ ஆண்டில் போர்ச்சுக்கீசிய அதிகாரம் கோவா, டையூ, டாமன் ஆகியவற்றோடு நின்றுபோனது.
A) 1639
B) 1672
C) 1719
D) 1739
42. ___________ ஆண்டு நெதர்லாந்து ஐக்கிய கிழக்கிந்திய கம்பெனி என்ற நிறுவனம் தொடங்கப்பட்டு, கிழக்கிந்திய நாடுகளில் வர்த்தகம் செய்ய அரசிடமிருந்து அனுமதி பெற்றது.
A) 1598
B) 1599
C) 1600
D) 1602

43. டச்சுக்காரர்கள் இந்தியாவிற்கு வந்த பிறகு ____________ என்ற இடத்தில் தனது வர்த்தக மையத்தை நிறுவினர்.

A) பாண்டிச்சேரி

B) பழவேற்காடு

C) மசூலிப்பட்டினம்

D) வங்காளம்

44. டச்சுக்காரர்கள் ____________ ஆண்டு போர்ச்சுக்கீசியரிடமிருந்து அம்பாய்னாவை கைப்பற்றி இந்தோனேசியா தீவில் ஆதிக்கத்தை நிலை நிறுத்தினர்.

A) 1602

B) 1603

C) 1604

D) 1605

45. டச்சுக்காரர்கள் ___________ ஆண்டு தலைநகரை பழவேற்காட்டிலிருந்து நாகப்பட்டினத்திற்கு மாற்றிக் கொண்டனர்.

A) 1680

B) 1687

C) 1689

D) 1690

46. கீழ்க்கண்டவற்றுள் டச்சுக்காரர்களின் முக்கிய வர்த்தக மையங்களாக இருந்தவை எவை?

1. பழவேற்காடு 2. சின்சுரா 3. சூரத்

4. காசிம்பஜார் 5. பாட்னா 6. பாலசோர்

A) அனைத்தும்

B) 2, 3, 5

C) 1, 2, 4, 5

D) 1, 3, 5, 6

47. கூற்று 1: இந்தியப் பொருட்களான பட்டு, பருத்தி, இண்டிகோ, அரிசி மற்றும் அபினி ஆகியவை டச்சுக்காரர்கள் வர்த்தகம் செய்த பொருட்களாகும்.

கூற்று 2: கருப்பு மிளகு மற்றும் மற்ற நறுமணப் பொருட்கள் மீதான வியாபாரத்தில் டச்சுக்காரர்கள் ஏகபோக உரிமை பெற்றிருந்தனர்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

48. __________ ஆண்டு டச்சுக்காரர்கள் அம்பாய்னாவில் பத்து ஆங்கில வியாபாரிகள் மற்றும் ஒன்பது ஜப்பானியர்களை கொன்றனர்.

A) 1613

B) 1618

C) 1620

D) 1623

49. ஆங்கிலேயர்கள் மற்றும் டச்சுக்காரர்களிடையே நடைபெற்ற பெடரா போர் ____________ ஆண்டு நடைபெற்றது.

A) 1728

B) 1732

C) 1759

D) 1788

50. டச்சுக்காரர்கள் தங்களது குடியேற்றங்களை முழுமையாக ___________ ஆண்டு ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தனர்.

A) 1759

B) 1762

C) 1785

D) 1795

51. பழவேற்காட்டில் டச்சுக்காரர்கள் ___________ ஆண்டு கெல்டிரியா கோட்டையைக் கட்டினர்.

A) 1610

B) 1612

C) 1613

D) 1615

52. கீழ்க்கண்டவற்றுள் டச்சுக்காரர்களின் கோட்டைகள் மற்றும் கைப்பற்றிய பகுதிகள் எவை?

1. நாகப்பட்டினம் 2. புன்னக்காயல்

3. பரங்கிப்பேட்டை 4. கடலூர்

5. தேவனாம்பட்டினம்

A) 1, 3, 5

B) 1, 3, 4

C) 1, 2, 3

D) அனைத்தும்

53. இங்கிலாந்து இராணி எலிசபெத் கிழக்கிந்திய நாடுகளுடன் வர்த்தகம் செய்ய கவர்னர் மற்றும் லண்டன் வர்த்தகர்கள் நிறுவனத்திற்கு ___________அன்று ஒரு அனுமதி பட்டயம் வழங்கினார்.

A) 1598 டிசம்பர் 28

B) 1599 அக்டோபர் 31

C) 1600 டிசம்பர் 31

D) 1600 அக்டோபர் 31

54. ஜஹாங்கீர் அவைக்கு, மாலுமி வில்லியம் ஹாக்கின்ஸ் அனுப்பிவைக்கப்பட்ட ஆண்டு

A) 1601

B) 1603

C) 1605

D) 1608

55. கூற்று: பேரரசர் ஜஹாங்கீர், 1613 ல் சூரத்தில் ஆங்கில வர்த்தக மையத்தை அமைக்க அனுமதித்தார்.

காரணம்: சூரத் அருகே நடைபெற்ற கடற்போரில் ஆங்கிலத் தளபதி தாமஸ் பெஸ்ட் போர்ச்சுக்கீசிய கடற்படையைத் தோற்கடித்தார்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று காரணம் இரண்டும் சரி மற்றும் சரியான விளக்கம்

D) கூற்று காரணம் இரண்டும் சரி ஆனால் சரியான விளக்கமல்ல.

56. கேப்டன் நிக்கோலஸ் டவுண்டன் __________ ஆண்டு போர்ச்சுக்கீசியரை வென்றார்.

A) 1613

B) 1614

C) 1615

D) 1616

57. ____________ ஆண்டு ஜஹாங்கீர் அவைக்கு இங்கிலாந்து மன்னர் ஜேம்ஸ் அவர்களால் சர் தாமஸ் ரோ அனுப்பிவைக்கப்பட்டார்.

A) 1614

B) 1615

C) 1616

D) 1617

58. சர் தாமஸ் ரோ கீழ்க்கண்ட எந்தெந்த இடங்களில் வணிக மையங்களை நிறுவினார்?

1. ஆக்ரா 2. அலகாபாத்

3. அகமதாபாத் 4. புரோச்

A) 1, 2, 4

B) 2, 4

C) 1, 3, 4

D) 1, 4

59. ஆங்கிலேயர்கள் தங்களது முதல் வணிக மையத்தை வங்காள விரிகுடா கடற்கரையில் உள்ள மசூலிப்பட்டினத்தில் எந்த ஆண்டு நிறுவினர்?

A) 1610

B) 1611

C) 1613

D) 1614

60. பிரான்சிஸ் டே என்ற ஆங்கில வணிகர், சந்திரகிரி மன்னரான சென்னப்ப நாயக்கர் என்பவரிடமிருந்து __________ ஆண்டு மெட்ராசை குத்தகைக்குப் பெற்றார்.

A) 1619

B) 1629

C) 1639

D) 1642

61. _____________ ஆங்கிலேயரால் கட்டப்பட்ட முதல் கோட்டையாகவும், கிழக்குப் பகுதி முழுமைக்குமான தலைமையிடமாகவும் விளங்கியது.

A) புனித டேவிட் கோட்டை

B) புனித ஜார்ஜ் கோட்டை

C) புனித லூயிஸ் கோட்டை

D) புனித பிரான்சிஸ் ஆலயம்

62. மன்னர் இரண்டாம் சார்லசிடமிருந்து பம்பாய் தீவை _____________ ஆண்டு ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி பெற்றது.

A) 1655

B) 1658

C) 1668

D) 1672

63. இங்கிலாந்து மன்னர் இரண்டாம் சார்லஸ் __________ இளவரசி காதரினை திருமணம் செய்து கொண்டார்.

A) டச்சு

B) டேனிய

C) போர்ச்சுக்கீசிய

D) எகிப்து

64. ___________ ஆண்டு சுதாநுதி என்ற இடத்தில் ஜாப் சார்னாக் என்பவரால் வர்த்தக மையம் நிறுவப்பட்டது.

A) 1672

B) 1685

C) 1688

D) 1690

65. சுதநூதி, காளிகட்டம் மற்றும் கோவிந்தபூர் ஆகிய மூன்று கிராமங்களின் ஜமீன்தாரி உரிமையை ___________ ஆண்டு கிழக்கிந்திய கம்பெனி பெற்றது.

A) 1690

B) 1692

C) 1696

D) 1698

66. சரியான இணையைத் தேர்ந்தெடு.

1. பிளாசி போர் – 1757

2. பக்சார் போர் – 1784

A) இரண்டும் சரி

B) 1 மட்டும் சரி

C) 2 மட்டும் சரி

D) இரண்டும் தவறு

67. டென்மார்க் அரசர் நான்காம் கிரிஸ்டியன் _____________ ஆண்டு ஒரு பட்டயத்தை வெளியிட்டு டேனிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தை உருவாக்கினார்.

A) 1614 மார்ச் 15

B) 1615 மார்ச் 16

C) 1616 மார்ச் 17

D) 1617 மார்ச் 18

68. தவறான இணையைத் தேர்ந்தெடு. (டேனியர்கள் குடியேற்றங்களை அமைத்த இடம் – ஆண்டு)

1. தரங்கம்பாடி – 1620

2. செராம்பூர் – 1676

A) இரண்டும் சரி

B) 1 மட்டும் சரி

C) 2 மட்டும் சரி

D) இரண்டும் தவறு

69. ___________ ஆண்டு டேனியர்கள் இந்தியாவிலிருந்த தங்கள் குடியேற்றங்கள் அனைத்தையும் ஆங்கில அரசுக்கு விற்றனர்.

A) 1745

B) 1785

C) 1792

D) 1845

70. ___________ என்பவர் தரங்கம்பாடியில் அச்சுக்கூடத்தை நிறுவினார்.

A) ஜோதன்பர்க்

B) சீகன்பால்கு

C) கால்பர்ட்

D) மார்காரா

71. பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் எந்த ஆண்டு உருவாக்கப்பட்டது?

A) 1662

B) 1663

C) 1664

D) 1665

72. _________ ஆண்டு வியாபாரத்திற்காக பிரான்காய்ஸ் கரோன் தலைமையின் கீழ் ஒரு குழு இந்தியாவிற்கு பயணம் மேற்கொண்டது.

A) 1665

B) 1666

C) 1667

D) 1668

73. தவறான இணையைக் கண்டறிக.

A) பிரான்சிஸ் டே – டென்மார்க்

B) பெட்ரோ காப்ரல் – போர்ச்சுக்கல்

C) கேப்டன் ஹாக்கின்ஸ் – இங்கிலாந்து

D) கால்பர்ட் – பிரான்ஸ்

74. இந்தியாவில் முதல் பிரெஞ்சு வணிக மையத்தை கரோன் என்பவர் __________ நகரில் நிறுவினார்.

A) ஆக்ரா

B) சூரத்

C) அகமதாபாத்

D) வங்காளம்

75. ___________ ஆண்டு பீஜப்பூர் ஆட்சியாளர் ஷெர்கான் லோடிக்கு வழங்கப்பட்ட மானியத்தின் கீழ், மார்டின் என்பவர் பாண்டிச்சேரியில் குடியேற்றத்தை நிறுவினார்.

A) 1663

B) 1669

C) 1673

D) 1674

76. வங்காளத்தின் முகலாய ஆளுநரான செயிஸ்டகானின் அனுமதி பெற்று _________ ஆண்டு பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி கல்கத்தாவுக்கு அருகே சந்திர நாகூர் என்ற நகரை நிர்மாணித்தது.

A) 1669

B) 1672

C) 1673

D) 1675

77. பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனியின் ஆளுநராக ஜோசப் பிராங்காய்ஸ் டியூப்ளே நியமனம் செய்யப்பட்ட ஆண்டு

A) 1685

B) 1712

C) 1735

D) 1742

78. தூரக்கிழக்கு நாடுகளுடன் வணிகம் செய்யும் நோக்கில் ஜோதன்பர்க் என்பவர் சுவீடன் கிழக்கிந்திய கம்பெனியை நிறுவிய ஆண்டு

A) 1713

B) 1728

C) 1731

D) 1742

79. பொருத்துக.

1. டச்சுக்காரர்கள் – i) 1664

2. ஆங்கிலேயர்கள் – ii) 1602

3. டேனியர்கள் – iii) 1600

4. பிரெஞ்சுக்காரர்கள் – iv) 1616

A) ii i iv iii

B) ii iii iv i

C) i iv v iii

D) iv iii i ii

# 8th Social Science Lesson 2 Questions in Tamil - வரலாறு

## 2. வர்த்தகத்திலிருந்து பேரரசு வரை

1. ___________ நூற்றாண்டில் நிலவழியாகவும், கடல் வழியாகவும் புதிய நிலவியல் கண்டுபிடிப்புகளின் சகாப்தமாக ஐரோப்பா விளங்கியது.
A) 13
B) 14
C) 15
D) 16

2. கூற்று 1: 1498 ஆம் ஆண்டு போர்ச்சுகல் நாட்டைச் சேர்ந்த மாலுமி வாஸ்கோடகாமா ஐரோப்பாவிலிருந்து இந்தியா வருவதற்கான புதிய கடல் வழியை கண்டுபிடித்தார்.
கூற்று 2: வங்காளத்தின் வெற்றிக்குப் பின் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி இந்தியாவில் வலுவடைந்தது.
A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

3. வங்காள நவாப் அலிவர்திகான் இறந்த பின்பு ____________ என்பவர் வங்காளத்தின் அரியணை ஏறினார்.
A) மீர்காசிம்
B) சிராஜ்–உத்–தௌலா
C) மீர்ஜாபர்
D) நிஜாம்–உத்–தௌலா

4. சரியானக் கூற்றைத் தேர்ந்தெடு.
1. இருட்டறை துயரச் சம்பவம் 1756 ஆம் நடைபெற்றது.
2. சிராஜ்–உத்–தௌலாவின் படை வீரர்கள் 146 ஆங்கிலேயர்களை சிறைப்பிடித்து கல்கத்தாவின் வில்லியம் கோட்டையில் காற்று புகாத ஒரு சிறிய இருட்டறை ஓர் இரவு முழுவதும் அடைத்து வைத்திருந்தனர்.
3. மறுநாள் காலை அறையை திறந்தபோது அவர்களுள் 23 பேர் மூச்சு திணறி இறந்திருந்தனர்.
A) அனைத்தும் சரி
B) 1, 3 சரி
C) 1, 2 சரி
D) 2, 3 சரி

5. ___________ ஆண்டு ஆங்கிலேயரின் வில்லியம்கோட்டை வங்காள நவாப் சிராஜ்–உத்–தௌலாவிடம் சரணடைந்தது.
A) 1756 ஜூன் 20
B) 1756 ஜூலை 20
C) 1757 ஜூன் 20
D) 1757 ஜூலை 20

6. சிராஜ்–உத்–தௌலா, இராபர்ட் கிளைவ் ஆகியோரிடையே __________ அன்று அலிநகர் உடன்படிக்கை ஏற்பட்டது.
A) 1757 ஜனவரி 19
B) 1757 பிப்ரவரி 9
C) 1757 மார்ச் 9
D) 1757 மே 9

7. பிரெஞ்சு குடியேற்றமான சந்திர நாகூரை ஆங்கிலேயர் கைப்பற்றிய நாள்
A) 1757 பிப்ரவரி
B) 1757 மார்ச்
C) 1757 ஏப்ரல்
D) 1757 மே

8. பிளாசிப் போரானது சிராஜ்–உத்–தௌலா, பிரஞ்சுக் கூட்டணிக்கும் மற்றும் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கும் இடையே ___________நாள் நடைபெற்றது.
A) 1757 மார்ச் 17
B) 1757 ஏப்ரல் 28
C) 1757 ஜூன் 23
D) 1757 ஜூலை 24

9. 1757ஆம் ஆண்டு பிளாசிப் போருக்கு பின் கீழ்க்கண்ட எந்த பகுதிகளில் ஆங்கிலேயர்கள் தடையில்லா வணிக உரிமை பெற்றனர்?
1. வங்காளம் 2. ஆக்ரா 3. ஒரிசா 4. பீகார்
A) அனைத்தும்
B) 1, 2, 3
C) 1, 3, 4
D) 2, 3, 4

10. பிளாசிப் போருக்கு பின் வங்காளத்தின் அரியணை ஏறியவர்
A) மீர்காசிம்
B) இராபர்ட் கிளைவ்
C) மீர்ஜாபர்
D) நிஜாம்–உத்–தௌலா

11. மீர்காசிம் வங்காளத்தின் தலைநகரை மூர்ஷிதாபாத்திலிருந்து __________க்கு மாற்றினார்.
A) மிட்னாபூர்
B) சிட்டகாங்
C) மாங்கீர்
D) பாட்னா

12. தஸ்தக் என்றழைக்கப்படும் சுங்கவரி விலக்கு ஆணையை தவறாக பயன்படுத்திய ஆங்கிலேயர் மீது கலகத்தில் ஈடுபட்ட மீர்காசிம் ஆங்கிலேயரால் தோற்கடிக்கப்பட்டு ___________க்கு தப்பி ஓடி அடைக்கலம் புகுந்தார்.

A) ஆக்ரா
B) அயோத்தி
C) பாட்னா
D) ஹைதராபாத்

13. வங்காள நவாப்பாக அரியணை ஏறிய பின்னர் மீர்காசிம் ஆங்கிலேயருக்கு கீழ்க்கண்ட எந்த பகுதிகளை வழங்கினார்?
1. புர்த்வான் 2. மிட்னாபூர்
3. சிட்டகாங் 4. மாங்கீர்
A) 1, 2, 3
B) 2, 3, 4
C) 1, 3, 4
D) 1, 2, 4

14. சுஜா–உத்–தௌலா, இரண்டாம் ஷா ஆலம், மீர் காசிம் மற்றும் ஆங்கிலப் படைக்கு இடையேயான பக்சார் போர் நடைபெற்ற நாள்
A) 1757 அக்டோபர் 20
B) 1762 நவம்பர் 19
C) 1764 அக்டோபர் 22
D) 1768 ஆகஸ்ட் 21

15. பக்சார் போரில், சுஜா–உத்–தௌலா இரண்டாம் ஷா ஆலம், மீர்காசிம் ஆகியோர் ஆங்கிலப்படைத் தளபதி __________ என்பவரால் தோற்கடிக்கப்பட்டனர்.
A) இராபர்ட் கிளைவ்
B) டியுப்ளே
C) ஹெக்டர் மன்றோ
D) கவுண்டிலாலி

16.____________ல் நடந்த அலகாபாத் உடன்படிக்கையின் படி பச்சார் போர் முடிவுக்கு வந்தது.
A) 1764 ஜனவரி 18
B) 1765 பிப்ரவரி 20
C) 1764 பிப்ரவரி 18
D) 1765 ஜனவரி 18

17. வங்காளத்தில் இரட்டை ஆட்சி முறையை கொண்டு வந்தவர் யார்?
A) இராபர்ட் கிளைவ்
B) டியுப்ளே
C) ஹெக்டர் மன்றோ
D) கவுண்டிலாலி

18. கூற்று 1: 18 ஆம் நூற்றாண்டில் மூன்று கர்நாடகப் போர்கள் பல்வேறு இந்திய ஆட்சியாளர்களிடையே நடைபெற்றது.
கூற்று 2: கர்நாடகப் போர்களில் ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியும் பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனியும் எதிர் எதிர் அணியில் இருந்தது.
A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

19. கர்நாடகப் போர்கள் எந்தக் காலக்கட்டத்தில் நடைபெற்றன?
A) 1736–1764
B) 1746–1768
C) 1746–1763
D) 1746–1784

20. சரியான இணையைத் தேர்ந்தெடு.
1. முதல் கர்நாடகப் போர் : 1746–1748
2. இரண்டாம் கர்நாடகப் போர்: 1749–1756
3. மூன்றாம் கர்நாடகப் போர்: 1756–1763
A) அனைத்தும் சரி
B) 1, 2 சரி
C) 2, 3 சரி
D) 1, 3 சரி

21. சாந்தோம் என்ற இடத்தில் நடைபெற்ற அடையாறு போர் யார் யாருக்கிடையே நடைபெற்றது?
A) அன்வாருதீன், போர்ச்சுக்கீசியர்கள்
B) ஆங்கிலேயர்கள், போர்ச்சுக்கீசியர்கள்
C) அன்வாருதீன், பிரெஞ்சுக்காரர்கள்
D) முசாபர் ஜங், பிரெஞ்சுக்காரர்கள்

22. நன்கு பயிற்சி பெற்ற ஐரோப்பிய படை இந்திய படையை வெற்றி பெற்று தங்கள் மேலாண்மையை நிலைநாட்டி முதல் நிகழ்வு
A) ஆற்காட்டுப் போர்
B) வந்தவாசி போர்
C) அடையாறு போர்
D) மைசூர் போர்

23. ____________ உடன்படிக்கையின் மூலம் முதல் கர்நாடகப் போர் முடிவுக்கு வந்தது.
A) பாண்டிச்சேரி உடன்படிக்கை
B) அய்–லா–சப்பேல் உடன்படிக்கை
C) மதராஸ் உடன்படிக்கை
D) மங்களூர் உடன்படிக்கை

24. கர்நாடகம் மற்றும் ஹைதராபாத் ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட வாரிசுரிமை பிரச்சனை ____________ போருக்கு முக்கிய காரணமாக அமைந்தது.
A) முதலாம் கர்நாடகப் போர்
B) இரண்டாம் கர்நாடகப் போர்
C) மூன்றாம் கர்நாடகப் போர்
D) அடையாறுப் போர்

25. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.
1. இரண்டாம் கர்நாடகப் போரில் பிரெஞ்சுக்காரர்கள் சந்தா சாகிப்பிற்கும், முசாபர் ஜங்–க்கும் உதவி செய்தனர்.
2. ஆங்கிலேயர்கள் அன்வாருதீனுக்கும், நாசிர்ஜங் – கும் உதவினர்.
A) இரண்டும் சரி
B) 1 மட்டும் சரி

C) 2 மட்டும் சரி
D) இரண்டும் தவறு
26. _________ ஆண்டு ஆம்பூரில் நடைபெற்ற போரில் பிரெஞ்சு கவர்னர் டியூப்ளே, சந்தாசாகிப், முசாபர் ஜங் ஆகியோரின் கூட்டுப் படைகளால் கர்நாடக நவாப் அன்வாருதீன் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டார்.
A) 1746 ஆகஸ்ட் 13
B) 1747 அக்டோபர் 3
C) 1748 ஆகஸ்ட் 3
D) 1749 ஆகஸ்ட் 3
27. சந்தாசாகிப்பை பிரெஞ்சுக்காரர்கள் கர்நாடக நவாப் ஆக்கியதற்கு ஈடாக அவர் பாண்டிச்சேரியை சுற்றியுள்ள _________ கிராமங்களை பிரெஞ்சுக்காரர்களுக்கு வெகுமதியாக வழங்கினார்.
A) 50
B) 60
C) 70
D) 80
28. கூற்று 1: இரண்டாம் கர்நாடகப் போரின்போது தக்காணத்தில் பிரெஞ்சுக்காரர்களால் நாசிர் ஜங் தோற்கடிக்கப்பட்டு, கொல்லப்பபட்டார்.
கூற்று 2: முசாபர் ஜங் ஐதராபாத்தின் நிசாம் ஆனார்.
A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு
29. முசாபர் ஜங் கிருஷ்ணா நதியின் தென்பகுதிகள் அனைத்திற்கும் _________யை ஆளுநராக நியமித்தார்.
A) இராபர்ட் கிளைவ்
B) டியூப்ளே
C) ஹெக்டர் மன்றோ
D) கவுண்டிலாலி
30. _________ ஆண்டு, முசாபர் ஜங் தன் மக்களால் படுகொலை செய்யப்பட்டார்.
A) 1746
B) 1749
C) 1751
D) 1753
31. சலபத் ஜங் ___________ மாவட்டத்தை தவிர வட சர்க்கார் முழுவதும் பிரெஞ்சுக்காரர்களுக்கு வழங்கினார்.
A) ரேணிகுண்டா
B) குண்டூர்
C) நெல்லூர்
D) மெட்ராஸ்
32. இரண்டாம் கர்நாடகப் போரின் போது, ஆற்காட்டை தாக்கும் இராபர்ட் கிளைவின் திட்டத்திற்கு அனுமதி வழங்கிய கவர்னர்
A) கவுண்–டி–லாலி
B) சாண்டர்ஸ்
C) லாரன்ஸ்
D) புஸ்ஸி
33. சரியான கூற்றை தேர்ந்தெடு. (இரண்டாம் கர்நாடகப் போர்)
1. லாரன்ஸ் உதவியுடன் இராபர்ட் கிளைவ் ஆரணி, காவேரிபாக்கம் ஆகிய இடங்களில் பிரெஞ்சுப் படைகளை தோற்கடித்தார்.
2. சந்தாசாகிப் திருச்சியில் கொல்லப்பட்டார்.
3. அன்வாருதீனின் மகன் முகமது அலி ஆங்கிலேயரின் உதவியுடன் ஆற்காட்டு நவாப் ஆனார்.
A) அனைத்தும் சரி
B) 1, 3 சரி
C) 2, 3 சரி
D) 1, 2 சரி
34. டியூப்ளேவை தொடர்ந்து பிரெஞ்சு ஆளுநராக பதவியேற்றவர்
A) புஸ்ஸி
B) கவுண்–டி–லாலி
C) கோதேயூ
D) பிரிகேடியர் மேத்யூஸ்
35. இரண்டாம் கர்நாடகப் போர் ________ ஆண்டு ஏற்பட்ட பாண்டிச்சேரி உடன்படிக்கையின்படி முடிவுற்றது.
A) 1754
B) 1755
C) 1756
D) 1757
36. கூற்று 1: ஐரோப்பாவில் வெடித்த ஏழாண்டு போர் இந்தியாவில் மூன்றாம் கர்நாடகப் போருக்கு இட்டுச்சென்றது.
கூற்று 2: இச்சமயத்தில் ஆங்கில படைத் தளபதி இராபர்ட் கிளைவ் பிளாசிப் போரின் மூலம் வங்காளத்தில் ஆங்கில ஆதிக்கத்தை நிறுவியதுடன் மூன்றாம் கர்நாடகப் போருக்கு தேவையான நிதியையும் வழங்கினார்.
A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு
37. மூன்றாம் கர்நாடகப் போரில் பிரெஞ்சு படைகளை வழிநடத்த __________ என்பவரை பிரெஞ்சு அரசாங்கம் நியமித்தது.
A) இராபர்ட் கிளைவ்
B) டியூப்ளே
C) புஸ்ஸி
D) கவுண்டிலாலி
38. கூற்று 1: மூன்றாம் கர்நாடகப் போரின் போது, கர்நாடகப் பகுதியிலிருந்து ஆங்கிலேயரை விரட்ட தன்னுடன் இணையுமாறு புஸ்ஸிக்கு, கவுண்டிலாலி உத்தரவிட்டார்.

கூற்று 2: புஸ்ஸி ஐதராபாத்திலிருந்து புறப்பட்ட தருணத்தை பயன்படுத்தி வட சர்க்கார் பகுதிகளை கைப்பற்ற கர்னல் போர்டை வங்கத்திலிருந்து இராபர்ட் கிளைவ் அனுப்பினார்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

39. _____________ ஆண்டு நடைபெற்ற வந்தவாசிப் போரில் ஜெனரல் அயர் கூட் தலைமையிலான ஆங்கிலேயப் படை கவுண்டிலாலி தலைமையிலான பிரெஞ்சுப் படையை முற்றிலும் தோற்கடித்தது.

A) 1756 ஜனவரி 20

B) 1760 ஜனவரி 22

C) 1763 ஜனவரி 30

D) 1764 ஜனவரி 24

40. ஐரோப்பாவில் நடைபெற்ற ஏழாண்டுப் போர் _____________ உடன்படிக்கையின் படி முடிவுக்கு வந்தது.

A) அய்லாசாப்பேல் உடன்படிக்கை

B) பாரிசு உடன்படிக்கை

C) மைசூர் உடன்படிக்கை

D) பாண்டிச்சேரி உடன்படிக்கை

41. __________ ஆண்டு ஹைதர் அலி மைசூர் சமஸ்தானத்தின் உண்மையான ஆட்சியாளரானார்.

A) 1758

B) 1761

C) 1764

D) 1768

42. முதல் ஆங்கிலேய–மைசூர் போருக்கான காரணங்களில் சரியானதை தேர்ந்தெடு.

1. ஹைதர் அலியின் வளர்ச்சி, அவர் பிரெஞ்சுக்காரர்களிடம் கொண்டிருந்த நட்புறவு ஆகியன ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் எதிர்ப்புக்கு காரணமாயின.

2. ஹைதர் அலிக்கு எதிராக மராத்தியர்கள், ஹைதராபாத் நிசாம், ஆங்கிலேயர்கள் இணைந்து முக்கூட்டணியை ஏற்படுத்தினர்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

43. தளபதி ஜோசப் ஸ்மித் தலைமையிலான ஆங்கிலப் படை உதவியுடன் ஹைதராபாத் நிசாம் ___________ ஆண்டு மைசூர் மீது படையெடுத்தார்.

A) 1758

B) 1762

C) 1765

D) 1767

44. முதல் ஆங்கிலேய–மைசூர் போரின் போது ____________ ஆண்டு ஹைதர் அலி மதராஸ் மீது படையெடுத்தார்.

A) 1767

B) 1768

C) 1769

D) 1770

45. இரண்டாம் ஆங்கிலேய மைசூர் போருக்கான காரணங்களில் சரியானதை தேர்ந்தெடு.

1. 1769ல் செய்துகொள்ளப்பட்ட மதராஸ் உடன்படிக்கையை ஆங்கிலேயர்கள் நிறைவேற்றத் தவறினர்.

2. 1771ல் மராத்தியர்கள் ஹைதர் அலி மீது படையெடுத்த போது மதராஸ் உடன்படிக்கையின் படி ஆங்கிலேயர்கள் ஹைதர் அலிக்கு உதவவில்லை.

3. ஹைதர் அலியின் ஆட்சிக்குட்பட்ட பிரெஞ்சு குடியேற்ற பகுதியான மாஹியை ஆங்கிலேயர்கள் கைப்பற்றினர். இந்நிகழ்வு ஆங்கிலேயருக்கு எதிராக ஹைதர் அலி, ஹைதராபாத் நிசாம், மராத்தியர்களின் முக்கூட்டணியை உருவாக்கியது.

A) அனைத்தும் சரி

B) 2, 3 சரி

C) 1, 3 சரி

D) 1, 2 சரி

46. ______________ ஆண்டு ஆங்கிலேய படைத் தளபதி சர் அயர்கூட் ஹைதர் அலியை பரங்கிப்பேட்டை என்ற இடத்தில் தோற்கடித்தார்.

A) 1780

B) 1781

C) 1782

D) 1783

47. புற்று நோயால் பாதிக்கப்பட்ட ஹைதர் அலி ____________ ஆண்டு இறந்தார்.

A) 1781

B) 1782

C) 1783

D) 1784

48. திப்பு, ஆங்கிலேய படைத்தளபதியான பிரிகேடியர் மேத்யூஸ் மற்றும் அவரது படைவீரர்களை கைது செய்த ஆண்டு

A) 1781

B) 1782

C) 1783

D) 1784

49. தவறான இணையைத் தேர்ந்தெடு.

A) முதல் ஆங்கிலேய மைசூர் போர் : 1767 – 1769

B) இரண்டாம் ஆங்கிலேய மைசூர் போர் : 1780 – 1784

C) மூன்றாம் ஆங்கிலேய மைசூர் போர் : 1790 – 1792

D) நான்காம் ஆங்கிலேய மைசூர் போர் : 1798

50. ஆங்கிலேயருக்கும், திப்பு சுல்தானுக்கும் இடையே மங்களூர் உடன்படிக்கை __________ ஆண்டு கையெழுத்தானது.

A) 1783 மே 8

B) 1783 மார்ச் 7

C) 1784 மார்ச் 7

D) 1784 மே 8

51. பின்வருவனவற்றுள் மூன்றாம் ஆங்கிலேய மைசூர் போருக்கான காரணங்கள் எவை?

1. மங்களூர் உடன்படிக்கைக்கு பின் ஆங்கிலேயருக்கு எதிராக வெளிநாடுகளுடன் கூட்டணி அமைக்கும் பொருட்டு பிரான்சு, மற்றும் துருக்கி ஆகிய நாடுகளுக்கு திப்புசுல்தான் தன்னுடைய தூதுவர்களை அனுப்பினார்.

2. ஆங்கிலேய கூட்டணியில் இருந்த திருவிதாங்கூர் சமஸ்தானத்தை திப்புசுல்தான் 1789ல் தாக்கினார்.

3. இச்சமயத்தில் திப்புசுல்தானுக்கு எதிராக ஆங்கிலேயர்கள், ஹைதராபாத் நிசாம் மற்றும் மராத்தியர்களுடன் இணைந்து மூவர் கூட்டணியை உருவாக்கினர்.

A) 2, 3

B) 1, 3

C) 1, 2

D) அனைத்தும்

52. மூன்றாம் ஆங்கிலேய மைசூர் போர் குறித்த கூற்றுகளில் தவறானதை தேர்ந்தெடு.

A) இரண்டு ஆண்டுகள் நடைபெற்ற இப்போரில் திப்பு சுல்தான் தனியாக எதிர்த்து போராடினார்.

B) 1788ல் தலைமை ஆளுநர் காரன்வாலிஸ் தானாகவே படையை வழிநடத்தினார்.

C) இப்போர் மூன்று கட்டங்களாக நடைபெற்றது.

D) போரின் முடிவில் காரன்வாலிஸ் 1792ல் ஸ்ரீரங்கபட்டிண உடன்படிக்கையை திப்புசுல்தானுடன் செய்து கொண்டார்.

53. ஸ்ரீரங்கப்பட்டின உடன்படிக்கையின் படி, ஆங்கிலேயர்கள் கீழ்க்கண்ட எந்த பகுதிகளை பெற்றனர்?

1. மலபார் 2. குடகு மலை

3. திண்டுக்கல் 4. பாரமஹால்

A) 1, 2, 3

B) 2, 3, 4

C) 1, 4

D) அனைத்தும்

54. ஸ்ரீரங்கப்பட்டின உடன்படிக்கையின் படி, போர் இழப்பீட்டு தொகையாக ___________ ரூபாய் செலுத்த வேண்டும் என்று திப்பு சுல்தான் கட்டாயப்படுத்தப்பட்டார்.

A) 1.2 கோடி

B) 2.4 கோடி

C) 3.6 கோடி

D) 4.8 கோடி

55. பின்வருவனவற்றுள் நான்காம் ஆங்கிலேய–மைசூர் போருக்கான காரணங்கள் எவை?

1. திப்பு சுல்தான் ஆங்கிலேயருக்கு எதிரான வெளிநாட்டு கூட்டணிக்காக அரேபியா, துருக்கி, ஆப்கானிஸ்தான் மற்றும் பிரான்சு ஆகிய நாடுகளுக்கு தன்னுடைய தூதர்களை அனுப்பினார்.

2. அச்சமயத்தில் எகிப்து மீது படையெடுத்த நெப்போலியனுடன் திப்பு தொடர்பு வைத்திருந்தார்.

3. பிரெஞ்சு அலுவலர்கள் ஸ்ரீரங்கப்பட்டணத்திற்கு வருகை புரிந்து அவர்கள் ஜாக்கோபியன் கழகத்தை நிறுவினார்கள், மேலும் அங்கு சுதந்திர மரம் ஒன்றும் நடப்பட்டது.

A) 2, 3

B) 1, 3

C) 1, 2

D) அனைத்தும்

56. 1799 நான்காம் ஆங்கிலேய–மைசூர் போரின் போது __________திப்புவின் மீது போர் தொடுத்தார்.

A) இராபர்ட் கிளைவ்

B) புஸ்ஸி

C) வாரன் ஹேஸ்டிங்ஸ்

D) வெல்லெஸ்லி

57. நான்காம் ஆங்கிலேய–மைசூர் போரின் நிகழ்வுகளில் சரியானதை தேர்ந்தெடு.

1. மைசூரின் மேற்கே பம்பாய் இராணுவம் தளபதி ஸ்டூவர்ட் தலைமையில் படையெடுத்தது.

2. இச்சமயத்தில் மெட்ராஸ் இராணுவம் தலைமை ஆளுநரின் சகோதரர் ஆர்தர் வெல்லெஸ்லி தலைமையில் திப்பு சுல்தானை தாக்கியது.

3. 1799 மே 14 ஆம் நாள் ஸ்ரீரங்கப்பட்டினம் கைப்பற்றப்பட்டது.

4. போரின் முடிவில் திப்பு சுல்தான் கொல்லப்பட்டார்.

A) அனைத்தும் சரி

B) 1, 2, 3 சரி

C) 1, 2, 4 சரி

D) 2, 3, 4 சரி

58. நான்காம் ஆங்கிலேய–மைசூர் போரின் முடிவில் திப்புவின் குடும்பத்தினர் _________கோட்டைக்கு அனுப்பப்பட்டனர்.

A) செயின்ட் ஜார்ஜ் கோட்டை

B) வில்லியம் கோட்டை

C) வேலூர் கோட்டை

D) திண்டுக்கல் கோட்டை

59. நான்காம் ஆங்கிலேய–மைசூர் போருக்கு பின் கீழ்க்கண்டஎந்த பகுதிகளை ஆங்கிலேயர்கள் இணைத்து கொண்டனர்?

1. கனரா 2. வயநாடு 3. கோயம்புத்தூர் 4. தாராபுரம்

A) 2, 3, 4

B) 2, 3

C) 2, 4
D) அனைத்தும்
60. சரியான இணையைத் தேர்ந்தெடு.
1. புனா – பேஷ்வா
2. பரோடா – கெய்க்வாட்
3. நாக்பூர் – போன்ஸ்லே
4. இந்தூர் – ஹோல்கர்
5. குவாலியர் – சிந்தியா
A) அனைத்தும் சரி
B) 2, 3, 4, 5 சரி
C) 1, 3, 4 சரி
D) 1, 4, 5 சரி
61. தவறான இணையைத் தேர்ந்தெடு.
1. முதல் ஆங்கிலேய மராத்திய போர் : 1775–1782
2. இரண்டாம் ஆங்கிலேய மராத்திய போர் : 1801–1803
3. மூன்றாவது ஆங்கிலேய மராத்திய போர் : 1815–1817
A) 1, 2 தவறு
B) 1, 3 தவறு
C) 2, 3 தவறு
D) எதுவுமில்லை
62. மராத்தியர்களின் பேஷ்வா நாராயண ராவின் இறப்புக்குப் பிறகு _________அடுத்த பேஷ்வா ஆனார்.
A) நானா பட்னாவிஸ்
B) ரகுநாதராவ்
C) மாதவராவ்
D) கங்காபாய்
63. ___________ ஆண்டு ஆங்கிலேயருக்கும் ரகுநாத ராவுக்கும் இடையே சூரத் ஒப்பந்தம் கையெழுத்தானது.
A) 1773
B) 1774
C) 1775
D) 1776
64. கர்னல் அப்டன் ___________ ஆண்டு பூனாவின் பாதுகாப்பரசுடன் புரந்தர் ஒப்பந்தத்தை செய்து கொண்டார்.
A) 1775
B) 1776
C) 1777
D) 1778
65. ____________ ஆண்டு வாரன் ஹேஸ்டிங்ஸ் மற்றும் மகாதாஜி சிந்தியா இடையே சால்பை ஒப்பந்தம் கையெழுத்தானது.
A) 1781 ஏப்ரல் 17
B) 1781 மே 17
C) 1782 ஏப்ரல் 17
D) 1782 மே 17
66. முதல் ஆங்கிலேய மராத்தியப் போரின் விளைவுகளில் சரியானதை தேர்ந்தெடு.
1. போரின் முடிவில் இரண்டாம் மாதவராவ் பேஷ்வாவாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, ரகுநாத ராவுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது.
2. பிரிட்டிஷ் அரசுக்கு சால்செட் பகுதி வழங்கப்பட்டது.
3. இந்திய அரசியலில் சால்பை ஒப்பந்தம் பிரிட்டிஷாருக்கு செல்வாக்கை ஏற்படுத்தியது.
4. பிரிட்டிஷாருக்கும் மராத்தியர்களுக்கும் இடையே அடுத்த இருபது ஆண்டுகளுக்கு சமாதான உறவு நீடித்தது.
A) 1, 2, 3 சரி
B) 2, 3, 4 சரி
C) 1, 3, 4 சரி
D) அனைத்தும் சரி
67. மகாதாஜி சிந்தியா ___________ ஆண்டு இறந்தார்.
A) 1792
B) 1793
C) 1794
D) 1795
68. பேஷ்வா இரண்டாம் மாதவராவ் __________ ஆண்டு தற்கொலை செய்து கொண்டார்.
A) 1794
B) 1795
C) 1796
D) 1797
69. பேஷ்வா, வெல்லெஸ்லி பிரபு இடையே___________ ஆண்டு பஸ்ஸீன் உடன்படிக்கை ஏற்பட்டது.
A) 1800
B) 1801
C) 1802
D) 1803
70. சிந்தியாவுடன் சுர்ஜீ–அர்ஜுகான் ஒப்பந்தத்தையும், போன்ஸ்லேவுடன் தியோகான் ஒப்பந்தத்தையும் ___________ ஆண்டு ஆங்கிலேயர்கள் செய்து கொண்டனர்.
A) 1802
B) 1803
C) 1805
D) 1807
71. பின்வருவனவற்றுள் இரண்டாம் ஆங்கிலேய–மராத்திய போரின் விளைவுகள் எவை?
1. இப்போருக்கு பின் மராத்தியர்களின் வலிமை காலப்போக்கில் பலவீனமடைந்தது.
2. இந்தியாவில் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி தலையாய சக்தியாக மாறத்தொடங்கியது.
A) இரண்டும் சரி
